# அலகு – 1

## TT0301 படைப்பாற்றல் – ஓர் உயர்நிலைத்திறன்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

படைப்பாற்றலை வளர்ப்பதன்மூலம் குழந்தைகள் சமூகத்தில் எவ்வாறெல்லாம் சிறந்து விளங்க முடியும் எனவும் அவ்வாறு விளங்க குழந்தைகளை ஆசிரியர் எவ்வாறெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளன.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- உயர்நிலைப் படைபாற்றல் திறனை அறிந்துகொள்ளலாம்.
- குழந்தையின் படைப்பாற்றலை வெளிப்படுத்தலாம்.
- படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகளை உணர்ந்து கொள்ளலாம்.
- படைப்பாளரைக் கண்டுபிடித்து திறமையை வெளிக்கொணர முடியும்.
- மாணவர்களின் படைப்பாற்றலின் உத்திகளை உணர முடியும்.
- மொழிசார்ந்த படைப்பாற்றலை வளர்த்து கொள்ள முடியும்.

## பாட அமைப்பு

| | |
|---|---|
| **1.0** | **பாட முன்னுரை** |
| **1.1** | **குழந்தையும் படைப்பாற்றல் திறனும்** |
| 1.2 | **படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகள்** |
| 1.2.1 | காலங்கடந்து நிற்கும் படைப்புகள் |
| 1.2.2 | படைப்பாற்றல் உருவாக்கும் உந்துதல் |
| 1.2.3 | புதுமை நாட்டத்தை ஏற்படுத்துதல் |
| 1.2.4 | படைப்புப் பெருமிதத்தை ஏற்படுத்துதல் |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **1.3** | **படைப்பாளரை அடையாளம் காணல்** |
| **1.4** | **படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடுகள்** |
| 1.4.1 | படைப்பாற்றலை வளர்க்கும் பழகு செயல்கள் |
| **1.5** | **படைப்பாற்றல் கல்வி** |
| 1.5.1 | படைப்பாற்றல் பற்றிய உளவியல் கோட்பாடுகள் |
| 1.5.2 | படைப்பாற்றலின் இயல்புகள் |
| 1.5.3 | படைப்பாற்றலின் கூறுகள் |
| 1.5.4 | படைப்பாற்றல் வெளிப்பாடு |
| 1.5.5 | படைப்பாற்றலுக்கான தடைகள் |
| 1.5.6 | படைப்பாற்றல் மிக்கோரின் ஆளுமைப் பண்புகள் |
| 1.5.7 | படைப்பாற்றலை வளர்ப்பதில் பெற்றோர்களின் பங்கு |
| 1.5.8 | படைப்பாற்றலை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு |
| 1.5.9 | படைப்பாற்றலின் நன்மைகள்/ பயன்கள் |
| **1.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |
| | |

# 1.0 பாட முன்னுரை

## பாட முன்னுரை

படைப்புத்திறன் என்பது ஒன்றைப் புதிதாய்ப் படைப்பது: ஒன்றிலிருந்து இன்னொன்றை உருவாக்குவது. ஒரே கோணத்தில் சிந்திக்காமல் மாறுபட்ட கோணத்தில் சிந்திப்பது. அதன் காரணமாக ஒரு புதுமையைப் படைப்பது எனலாம். இதை ஆங்கிலத்தில் "Creativity" என்று அழைப்பர். புதுமை மற்றும் தனித்தன்மையான உருவாக்கும் திறனையே படைப்பாற்றல் என்பர். இவ்வலகில் படைப்பாற்றல் திறன், படைப்பாளரை அடையாளங்காணல், படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடுகள், உளவியல் கோட்பாடுகள், படைப்பாற்றல் கூறுகள், படைப்பாற்றலின் நன்மை/பயன்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

## படைப்பாற்றல்

பாடும் திறமை எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவரும் நமக்கு அத்திறன் இல்லை என்று நினைத்துக் கொள்கிறோம். அதற்குக் காரணம் எப்படிப் பாடுவது என்பதை நாம் மதிக்கும் ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு அளவிடுவதேயாகும். நாம் பிறரைப் போல பாட முடியாமல் இருக்கலாம். ஆனால் பாட்டுத் திறன் நம்மிடம் உள்ளது. ஆர்வம் இருந்தால் வளர்த்துக் கொள்ளலாம். அவ்வாறே எழுதும் திறன், ஆடல் திறன், நடிப்புத் திறன் ஆகியனவற்றையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

நமது மூளையின் வலப் பக்கத்தில்தான் புதிய எண்ணங்கள் தோன்றுகின்றன. நமது பள்ளிக்கூடங்களில் இடப் பக்க மூளையை அதிக அளவில் பயன்படுத்தவே பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனால் பள்ளிச் சூழலிலும் பள்ளியிலிருந்து வெளியேறியவர்களும் தாங்கள் விரும்பினால் வலப் பக்க மூளையைப் பயன்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

## விளக்கம்

படைப்பாற்றல் பற்றி பல துறைகள் பலவிதமான கோணங்களில் ஆய்வு செய்துள்ளன. எனினும் ஒரு தெளிவான அறிவியல் வரையறை உருவாக்கப்படவில்லை. படைப்பாற்றல் என்பதற்கு ஆக்கத்திறன் (Creativity), செயலாக்கத்திறன், ஆக்கச்சிந்தனை, புதியனவற்றைப் புனையும் திறன் என்பன போன்ற சொற்களை உளவியலாளர்கள் பயன்படுத்துகின்றனர். படைப்பாற்றல் என்பது "யாது" என்ற வினாவிற்கு எளிய முறையில் விடையளிப்பது ஓரளவு கடினமாகும்.

"ஆக்கத்திறன் என்பது நுண்ணறிவுடன் தொடர்புடையதாக இருந்தாலும் நுண்ணறிவிலிருந்து விலகியும் நிகழக்கூடிய சிறப்பு ஆற்றல்" என்கிறார் கில்பர்ட். "முன்பு இல்லாததும் புதியதுமான கருத்தையோ பொருளையோ உண்டாக்கும் திறன்" என்கிறார் ஆசுபெல். அதாவது "அறிவு அல்லது கலை சார்ந்த குறிப்பிட்ட சில துறைகளில் உட்காட்சி வழியே உடனடியாகப் புதிய அறிவினைப் பெறுதல், இத்துறைகளில் எழும் சிக்கல்களின் உண்மை நிலைபற்றி அறிந்து துல்லியமான நுண்ணுணர்வுடன் (Sensitivity) செயற்படுதல் போன்ற பண்புகள் கொண்ட ஓரளவு சாதாரணமாகக் காணப்படாத ஆற்றல் ஆக்கத் திறனாகும்" என்று படைப்பாற்றலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதை "கருத்துகளின் புதுமை" என்கிறார் பிரான்ஸிஸ் கோல்டன்.

படைப்பாற்றலின் விளைவு 'புதுமை' எனப்படும் பண்பினைக் கொண்டிருக்கும். இப்புதுமைப் பண்பு எந்த அளவுக்கு அவ்விளைவில் அதிகமாகக் காணப்படுகிறதோ அந்த அளவுக்குப் படைப்பாற்றலும் சிறப்பாகச் செயற்பட்டதாகக் கொள்ளலாம். எல்லா புதுமைத் தோன்றலுக்கும் தொடக்கத்திலேயே உரிய அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று கூற இயலாது.

**எ.கா :**

முன்பு பாரடே (Faradey) என்னும் விஞ்ஞானி, மிகச்சிறிய அளவில் மின்சக்தியை உற்பத்திசெய்து காட்டியபோது, அன்றைய இங்கிலாந்தின் பிரதமர் இதனால் எவருக்கு என்ன பயன் என்று வினவியதாகவும், அதற்குப் பாரடே, இன்னும் சில ஆண்டுகளில் இதற்கு நீங்கள் வரிவிதிக்கலாம் என்றதாகவும் கூறப்படுகிறது. அன்று வேடிக்கையாகக் கருதப்பட்டது இன்று நமது தொழில்நுட்பச் சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழ்கிறது. பல நூறு ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது திருக்குறள். அது எக்காலத்தும் எச்சூழலுக்கும் யாவருக்கும் எவ்விதப் பாகுபாடுமின்றி அறக்கருத்துகளை எடுத்துக்கூறுவதாக விளங்குகிறது. எனவே சமுதாயத்திற்குப் பயனளிக்கும் படைப்பாற்றல் என்றும் நிலைத்து நிற்கும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

படைப்பாற்றலை இன்னதென வரையறுத்துக் கூற இயலாது. ஏனெனில் அறிவியல் மேதைகள், கலைத்திறன் மிக்கவர்கள், படைப்பாளிகள் அனைவரும் தாங்கள் அறிந்த செய்திகள், அனுபவங்கள், உள்ளுணர்வுகளைப் பயன்படுத்திப் புதுமையானவற்றைப் படைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, புதுமையான கவிதைகள், பாடல்களைப் பாரதியார் இயற்றியுள்ளார். சர்.சி.வி.ராமன் அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார். எனவே, படைப்பாற்றல் எனப்படுவது ஆக்கச்

சிந்தனையுடன் தொடர்புடையது. உயர்நிலைத் திறன்களுள் ஒன்றான படைப்பாற்றலைப் பற்றி விளக்குவதாக இவ்வலகு அமைகிறது.

## 1.1 குழந்தையும் படைப்பாற்றல் திறனும்

### குழந்தையும் படைப்பாற்றல் திறனும்

ஒன்றை உருவாக்குதல் தொடர்பான திறன் எல்லோரிடமும் வெவ்வேறு அளவுகளில் இருக்கிறது. அது பிறவிக் குணம் அன்று; அதனை எப்போது வேண்டுமானாலும் வளர்த்துக் கொள்ளலாம். மனிதன் பெற்றுள்ள அறிவுத் திறன்களை, 'மனித மனத்தின் கட்டமைப்பு' என்ற நூலில் ஜி. கார்டனர் ஆறு வகையாகப் பிரித்துக் கூறுகிறார். அவை,

- மொழித்திறன்
- இசைத்திறன்
- உடல்திறன்
- வெளிஉலகு சார்ந்த கற்பனைத்திறன்
- காரணகாரிய தொடர்புத்திறன்
- படைப்புத்திறன்

என்பனவாகும். இவை அனைத்தும் உயர்நிலைத் திறன்களாகும்.

### 1.1.1 மொழித்திறன்

எழுத்து அல்லது பேசுதலின் வழியாக மொழித்திறனை வெளிப்படுத்துகிறோம். அதற்கு மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். சொற்களைச் சரியாகக் கையாள்வது; ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பொருளை உணர்ந்து சரியான இடத்தில் பயன்படுத்துவது ஆகியவை மொழியைத் திறமையாகப் பயன்படுத்துவதில் அடங்கும்.

மொழிப்புலமையைப் பயன்படுத்தி சொற்களைத் திறமையாகக் கையாண்டு அதனைப் பேச்சு மூலமாகவோ எழுத்தின் மூலமாகவோ வெளியிடுவதே மொழித்திறனாகும். எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் மொழித்திறன் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. அதனால்தான் அவர்களின் படைப்புகளும் சிறப்பாக அமைந்துவிடுகிறது.

### 1.1.2 இசைத் திறன்

ஒலி, ஓசையைக் கேட்டு மனத்தில் வாங்கி, ஒழுங்கான அலைநீளத்தில் மறு உருவாக்கம் செய்து கொடுக்கும் திறன்தான் இசைத்திறன். இசையமைப்பதன் மூலம் இது வெளிப்படுத்தப்படுகிறது. பாட்டுக்குத் துணையாக இசை நிற்கிறது. இசையோடு கூடிய பாட்டு மனத்தில் பதிகிறது. கேட்போருக்கும் இன்பம் தருகிறது. உழைத்துக் களைத்த மக்களுக்கு இசை புத்துணர்ச்சியை அளிக்கிறது. பெருவாரியான மக்கள் சுவைக்கும்படியாக இசைத்திறனை வெளிப்படுத்த இசைப்புலமை மிக்கவர்களால் முடியும். இத்தகு இசைத்திறனைக் கற்றுக் கொள்ள முடியும். இசையும் பாட்டும் சமுதாயத்தின் மகிழ்ச்சிக்கு மட்டுமே காரணமாய் அமைந்து விடாமல், சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுவதாகவும் இருக்க வேண்டும்.

### 1.1.3 உடல் திறன்

ஐம்புலன்கள் மூலம் செய்திகளை வெளிப்படுத்தும் திறன் உடல் திறன் ஆகும். உடல்திறனில் நடிப்புக் கலையும் அடங்குகிறது. நாடகம், கூத்து, திரைப்படம் ஆகியவற்றில் ஈடுபடும் நடிகர்களுக்கு இத்திறன் முக்கியம். அவர்களது உடலே அவர்களின் பேசும் மொழியாக விளங்குகிறது.

### 1.1.4 வெளி உலகு சார்ந்த கற்பனைத்திறன்

இத்திறனைச் சிற்பிகள், ஓவியர்கள், புகைப்பட கலைஞர்கள், திரைப்பட ஒளிப்பதிவாளர்கள் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளோடும் இத்திறன் தொடர்புடையது.

### 1.1.5 காரணகாரிய தொடர்புத் திறன்

இது சிக்கல்களை அலசி ஆராய்வதுடன் தொடர்புடையது. எந்த ஒரு சிக்கலையும் பல கோணங்களில் ஆராய இத்திறன் பயன்படுகிறது.

### 1.1.6 படைப்புத்திறன்

இது புதியதாக ஒன்றனை உருவாக்கும் திறனாகும். ஒரு விஷயத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவரக் கூடியது. ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லக்கூடியது படைப்புத்திறனாகும். இதனைப் படைப்பாற்றல் என்றும் கூறுவர்.

## 1.2 படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகள்

### படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகள்

இயல்பாகவே குழந்தைகள் கற்பனையும் சிந்தனையும் உடையவர்களாகவே இருக்கின்றனர். "கற்பனைத் தத்துவம், அறிவுக்கு எட்டாதது; சொற்களால் உணர்த்த முடியாதது; அது அதன் பலன்களை மட்டும் கொண்டே அறியப் பெறுவதாகும்" என்று கவிஞர் ரஸ்கின் கூறியுள்ளார். இவர் கூற்றின் வெளிப்பாட்டைக் குழந்தைகளிடம் இயல்பாகவே காணலாம். குழந்தைகளிடம் ஏதேனும் பொருளைக் கொடுத்தால், நம் கற்பனைக்கு எட்டாத ஒன்றனை அழகாக வடிவமைத்துக் காட்டுவர்.

இரு பென்சில் மலையாக மாறும்; விமானமாகிப் பறக்கும்; மருத்துவமனைக் குறியீடாகும். குழந்தைகளின் கற்பனைக் குதிரைக்குக் கட்டுத்தறி இல்லை. கதைகள், புதிய முடிவினைப் பெறும். பல வடிவங்களில் பாடல்கள் உருவாகும். கருத்துகள் மாற்றுச் சிந்தனைக்கு உள்ளாகும். இத்தனை ஆற்றலும் குழந்தைகளிடம் நிறைந்தே காணப்படுகின்றன.

படைப்புத் திறனை வெளிப்படுத்தும் போதுதான் சமுதாயத்திற்கு பயன்படும். படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ள பல நூல்களைத் தொடர்ந்து கற்றல் அவசியம். அவை அறிவாற்றலை வளர்க்கும். அது படைப்புத்திறன் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

### 1.2.1 காலங்கடந்து நிற்கும் படைப்புகள்

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னும் பின்னும் தோன்றிய தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்கள், ஆழ்வார் பாடல்கள், நாயன்மார் பாடல்கள், கம்பராமாயணம் போன்றவை இன்றளவும் மக்களால் விரும்பிப் படிக்கப்பெற்றுப் பயனளிப்பதற்கு அவை படைப்பாற்றல் மிக்கவையாக விளங்கியமையே காரணம் ஆகும்.

### 1.2.2 படைப்பாற்றல் உருவாக்கும் உந்துதல்

எத்தகைய திறனையும் கற்பிப்பதாலும் பழகுதலாலும் பெறவியலும் என்பதை முன்னரே கண்டோம். கற்பிப்புக் காலத்தில் மாணவர்கள் பெறுகின்ற இலக்கிய

ஆர்வம், எக்கருத்தையும் எழிலுணர்ச்சியுடன் நுணுகி நோக்கல், படிப்புப் பழக்கம், படித்ததைப்போல ஒன்றைத் தானும் உருவாக்கவேண்டும் எனும் பெருமித உணர்வு ஆகிய உந்தல்களை ஆசிரியர் மாணவர்க்கு உண்டாக்க வேண்டும். இத்தகைய உந்துதல்கள் அவர்களைச் சிறந்த படைப்பாளராக உருவாக்க வழிவகுக்கும்.

### 1.2.3 புதுமை நாட்டத்தை ஏற்படுத்துதல்

புதுமை நாட்டம் இல்லாதவர்களால் படைப்பாற்றல் சிந்தனையை வெளிப்படுத்த முடியாது. மாறுதல் விரும்பாதவர்களும் புதிய ஒன்றை உருவாக்க மாட்டார்கள். எனவே படைப்பாக்கச் சிந்தனையை/திறனை வளர்ப்பதில் புதுமை நாட்டம் அவசியமானது. 'புதியன விரும்பு' என்பது பாரதியின் வாக்கு.

காது கேளாதவரான பீத்தோவனின் இசை ஒரு படைப்பு! கண் தெரியாத காலத்தில் மில்டன் எழுதிய 'இழந்த சொர்க்கம் ஓர் அற்புதப் படைப்பு!' புதுமை விரும்பி பிக்காஸோவின் ஓவியங்கள் சிந்தனையைத் தூண்டும் ஓவியக் காவியங்கள்!

மார்க்சிய மூலவர்களான மார்க்சும் ஏங்கல்சும் உருவாக்கிய கம்யூனிசச் சித்தாந்தம் நமது காலத்தின் மகத்தான படைப்பு! படைப்புத் திறனை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனை புதிய புதிய கருத்துகளை உருவாக்கும்! அவை புதிய மாறுதலுக்குத் தூண்டுகோலாக இருக்கும்.

### 1.2.4 படைப்புப் பெருமிதத்தை ஏற்படுத்துதல்

தாம் பலவற்றைக் கற்றுள்ளோம், அதைப் பிறருக்குக் கூறவேண்டும் எனும் பெருமித உணர்வு படைப்பாற்றலுக்கு மிகச் சிறந்த உந்துதல் ஆகும். பெருமித உணர்வின் கூறுகளுள் ஒன்றாகக் 'கொடை' என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இக்கூறு படைப்பாற்றல் முனைப்போடு ஒப்பிட்டு எண்ணத்தக்கதாகும். எனவே, மாணவர்க்குப் படைப்புப் பெருமித உணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும். அதற்காக மாணவர்களின் படைப்பாற்றல் திறனை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல கீழ்க்காணும் செயல்களை மேற்கொள்ளலாம்.

- வகுப்பில் பிற மாணவர்களின் முன் பாராட்டுதல்
- வகுப்பு மாணவர்களையும் பாராட்டச் செய்தல்
- மாணவர்களின் படைப்பை வகுப்பில் காட்சிப்படுத்துதல்

- பள்ளிப் பொதுவிடங்களில் படைப்பைக் காட்சிப்படுத்துதல்
- மன்றங்களில் அரங்கேற்றிப் பாராட்டுரை வழங்குதல்
- பள்ளி இதழ்களில் படைப்புகள் இடம்பெறச் செய்தல்
- மாணவர், சிறுவர் இதழ்களில் படைப்புகள் இடம்பெறச் செய்தல்

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
| --- |
| 1. படைப்புத்திறன் என்றால் என்ன? |
| 2. மனித மனத்தின் கட்டமைப்பு வகைகளைக் கூறுக. |
| 3. குழந்தையின் மொழித்திறன்களை விளக்குக. |
| 4. படைப்பாற்றலை ஊக்குவிக்கும் காரணிகள் யாவை? |
| 5. மாணவர்களின் படைப்பாற்றலை உருவாக்க ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்களைக் கூறுக. |

## 1.3 படைப்பாளரை அடையாளம் காணல்

### படைப்பாளரை அடையாளம் காணல்

குழந்தைகள் கற்பனை, சிந்தனை, படைப்பாற்றலோடுதான் பள்ளிக்கு வருகிறார்கள். மக்கள் உள்ளம் எந்த ஒன்றில் ஆர்வமாகவும் ஆழமாகவும் ஈடுபடுகிறதோ அந்த ஒன்றனைப் படைத்துப் பார்க்கவும் விரும்பும். சான்றாகச் சொற்பொழிவினைக் கேட்கும்பொழுது, பேச்சாளராக வேண்டும் என்னும் எண்ணமும் சிறந்த கட்டுரைகளையும் கதைகளையும் படிக்கும்பொழுது எழுத்தாளராக வேண்டும் என்னும் எண்ணமும், சிறந்த கவிதைகளைப் படித்துச் சுவைக்கும்பொழுது கவிஞராக வேண்டும் என்னும் எண்ணமும் எழும். நல்ல உணவு வகைகளை உண்டு மகிழும்பொழுது, அதைப்போன்று சமைத்துப் பார்க்கவேண்டும் என்னும் எண்ணமும் எழுவது நமக்கு இயற்கைதானே! இவற்றையே "படைப்பூக்கம்" எனக் குறிப்பர் உளவியலாளர்கள். குழந்தைகளிடையே எழும் படைப்பூக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு அவர்களின் படைப்பாற்றலை வளர்க்க வீட்டில் பெற்றோர்களும் பள்ளியில் ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

சோவியத் ரஷ்யாவில் தோழர் லெனின் அதிபராக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி. இரண்டு பள்ளிக் குழந்தைகள் தங்கள் தலைமையாசிரியரைப் பற்றி புகார் தெரிவிக்க லெனினிடம் வந்திருந்தனர். என்ன விஷயம்? என்று லெனின் கேட்டார். தங்களைப் பள்ளியிலிருந்து நீக்கிவிட்டதாகக் குழந்தைகள் கூறினர்.

நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்? என்று லெனின் விசாரித்தார். வகுப்பறைக்குச் செல்லாமல் பள்ளிக்கு வெளியே பெய்திருந்த பனிக்கட்டியில் வாகனங்கள் செய்து விளையாடிக் கொண்டிருந்தோம் என்று குழந்தைகள் பதிலளித்தனர். அவர்களைக் கடிந்து கொள்ளாமல் தலைமையாசிரியரை வரவழைத்து குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்குமாறு லெனின் கூறினார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் படையைச் சைபீரியாவில் முறியடிக்க அக்குழந்தைகளின் கற்பனைதான் சோவியத் படைகளுக்கு உதவியது. சைபீரியாவில் பெய்திருந்த பனிக்கட்டிகளால் செய்யப்பட்ட பீரங்கிகளை உண்மையானவை என்று நினைத்து அவைகளை அழிக்க நாஜிப் படைகள் சைபீரியாவிற்குள் நுழைந்து தாக்கியவுடன் அவர்கள் அழிந்தனர். பள்ளி மாணவர்களின் படைப்பாற்றலே சோவியத் வெற்றிக்கு வித்திட்டது என்று கூறினால் மிகையாகாது.

ஆகவே, மாணவர்களின் படைப்பாக்கத் திறனை வெளிக்கொணரும்படி கற்பித்தல் முறையைக் கையாண்டு மாணவர்களுக்கு மொழிப்பாடத்தைக் கற்பித்தால் நிறைவான கற்றல் அனுபவங்களை அவர்கள் பெறுவர். அவ்வனுபவம் மாணவர்களின் படைப்பாக்கச் சிந்தனையைத் தூண்டும். வகுப்பறையில் படைப்பாக்கத் திறனை மேம்படுத்துவதற்கு அடிப்படையான நான்கு கூறுகள் உள்ளன. அவை பின்வருவன:

- படைப்பாக்கத்திறனைத் தூண்டும்படியான வகுப்பறைச் சூழல் (Creative Press)
- படைப்பாக்கத்திறன்மிக்க மாணவர் (Creative Person)
- படைப்பாக்கத்திறனுக்கான செயற்பாடு (Creative Process)
- படைப்பாக்கத்திறனை வெளிப்படுத்தும் படைப்பு (Creative Product)

அதாவது முதலில், படைப்பாக்கத்திறனைத் தூண்டும்படி வகுப்பறைச் சூழல் அமைய வேண்டும். அவ்வாறு அமைந்தால் படைப்பாக்கத் திறன்மிக்க மாணவர்கள் ஆக்கப்பூர்வமான படிநிலையில் சிக்கலுக்குத் தீர்வு காண்பர். இதன்மூலம் உருவாக்கப்படும் படைப்பு, மாணவர்களின் படைப்பாக்கத்திறனை வெளிப்படுத்தும் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். இம்முறையில் மூன்று படிநிலைகள் உள்ளன. அவை பின்வருவன:

### ஊக்கமூட்டுதல் (Encouraging)

மாணவர்கள் தங்களிடமுள்ள படைப்பாக்கத்திறனை வெளிப்படுத்தும்படி ஆசிரியர்கள் அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

### அடையாளங்காணுதல் (Identifying)

தங்களுக்குள் உள்ள படைப்பாக்கத்திறனை மாணவர்கள் சுயமாக அடையாங்கண்டு கொள்ள உதவுதல் வேண்டும்.

### வலு சேர்த்தல் (Fostering)

தங்களுடைய படைப்பாக்கத்திறன் செயற்பாட்டை(Process) தாங்களே அனுபவத்தின்மூலம் வளர்த்துக்கொள்ள வழிகாட்டுதல் வேண்டும்.

## 1.4 படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடுகள்

### படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடுகள்

மாணவர்களின் படைப்பாற்றலை உரைநடை, செய்யுள் ஆகிய இரு வடிவங்களில் வெளிப்படக் கற்றல்–கற்பித்தல் மூலமாகவும், நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருவதன் மூலமாகவும் வழிகாட்டுதல் மூலமாகவும் ஆசிரியர் உதவமுடியும்; உதவ வேண்டும். கீழ்க்காணும் உத்திகளைப் பின்பற்றி மாணவர்களிடம் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

- வாசித்தல் திறனை வளர்த்தல் (SKILL OF READING)
- மனப்பாட அறிவினை வளர்த்தல் (SKILL OF MEMORIZATION)
- சிந்திக்கும் திறனை வளர்த்தல் (SKILL OF THINKING)
- கற்பனை ஆற்றலை வளர்த்தல் (SKILL OF IMAGINATION)
- அழகுணர் ஆற்றலை வளர்த்தல்
- எழுதும் திறனை வளர்த்தல் (SKILL OF WRITING)

- **வாசித்தல் திறனை வளர்த்தல்**

வாசிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளும்போது சிந்திக்கும் திறனும் வளருகிறது. கற்பனை ஆற்றல் சிறகடிக்கிறது. ஒன்றைப் புதிதாய்ப் படைக்கும் ஆர்வம் பிறக்கிறது. மொழியில் புலமை கிட்டுகிறது. எழுத்து, பேச்சுத்திறன் வளர உதவுகிறது.

படிப்பதும் சிந்திப்பதும் நல்லதாக அமையுமானால் பேச்சும் நடத்தையும் நல்லவிதமாகவே அமையும். 'உலகில் உள்ள நல்லவை அனைத்தையும்

உள்வாங்க வேண்டும்' என்பது கார்ல் மார்க்சின் கருத்து. நல்லதைப் படித்துச் சிந்திக்கும்போது நல்லவை யாவும் மனக்கடலில் கலக்க வேண்டும் என்ற ஆர்வம் தூண்டப்படும். தேடல் உண்டாகும். 'நினைவு நல்லது வேண்டும்' என்பார் பாரதியார். உள்ளத்தில் நல்லவை நிறைந்திருந்தால் வாக்கிலும் நல்லதே வெளிப்படும்.

நிறைய வாசிக்கும்போது அல்லது தேர்ந்தெடுத்த நூல்களைப் வாசிக்கும்போது ஒருவரது படைப்புத்திறன் தூண்டப்படுகிறது. ஒன்றைப் புதிதாக உருவாக்கவும் புதிய கோணத்தில் சிந்திக்கவும் மனம் விரும்புகிறது. வாசிக்கும் திறன் கொண்டவர் மனத்தில் உறுதி இருக்கும். சிந்தனை தெளிவு இருக்கும். வாழ்க்கையில் பிரச்சினைகள் வரும்போது துணிவுடன் விரைந்து சிக்கலைத் தீர்க்க மாணவரால் முன்வர முடியும்.

ஒவ்வொரு நூலிலும் இருப்பது கற்பனை மட்டுமல்ல. வாழ்க்கை அனுபவமும்தான். எனவே கற்பனைப் படைப்புகள் கூட வாழ்க்கைக்கு வழிகாட்டும்! ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய படிப்பாளி மாமேதை எங்கல்ஸ் என்று கார்ல் மார்க்ஸ் வர்ணித்தார். மார்க்சும் மிகப் பெரிய அளவுக்கு வாசிக்கும் திறன் கொண்டவர்தான். இவ்விருவரின் அடியொட்டி ரஷ்யாவில் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் வாசிக்கும் திறன் மிகுந்தவர்தான். வாசிப்பதில் முழு கவனமும் செலுத்தும்போது சில சமயம் நம்மைச் சுற்றி நடப்பவற்றை மறந்து விடுபவர்களும் உண்டு. எனவே 'யோகா' செய்வதில் கிடைக்கும் பலன் கூட ஆழ்ந்து கற்கும்போது உண்டாகி விடுகிறது. கவனம் சிதறாமல் நூலைப் படிக்கும் பழக்கமானது நாளடைவில் கவனம் சிதறாமல் ஒரு செயலைச் செய்து முடிக்கும் திறனை வளர்த்துவிடும்

- **மனப்பாட அறிவினை வளர்த்தல்**

இலக்கியங்களைப் படித்ததால் பெற்ற மொழிநடை, கருத்து வைப்புமுறை ஆகியவற்றால் பெற்ற மனப்பாட அறிவு, படைப்பாற்றலுக்குப் பெரிதும் துணைநிற்கும். தொடக்கநிலையில் மொழி வடிவ மனப்பாட அறிவு, படைத்தல் செயலுக்கான உந்துதல் ஆகும். வளர்ச்சி நிலையில் கருத்தளவிலான மனப்பாட அறிவு மொழிவடிவ மனப்பாட அறிவோடு இணைந்து தன்னாக்கப் படைப்புகளை வெளிக்கொணரும்.

- **சிந்திக்கும் திறனை வளர்த்தல்**

படைப்பாக்கச் சிந்தனையை விரும்புகின்றவர் தங்கு தடையின்றிச் சிந்திக்க வேண்டும். ஒரு பிரச்சினைக்குப் பல தீர்வுகளைச் சிந்திக்க வேண்டும்.

படைப்பாக்கச் சிந்தனை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறக் கூடியது. அதனால் நெளிவு சுழிவு தேவைப்படுகிறது. புதிய சிந்தனைகளும் கருத்துகளும் ஒரே மாதிரியாக இருக்காது. ஒரே வர்க்கத்திற்கு உரியதாகவும் இருக்காது. ஒரு சூழ்நிலையை அல்லது சிக்கலை பல கோணங்களில் அணுகக் கூடியதுதான் படைப்பாக்கச் சிந்தனை.

படைப்புத்திறனைத் தூண்டி வளர்க்கும்போது ஒருவர் தனது அணுகுமுறையை மாற்றி எந்த ஒரு பிரச்சினையையும் அணுக முடியும். புதிய அணுகுமுறையின் மூலம் கிடைக்கும் தீர்வானது பழைய அணுகுமுறையால் கிட்டும் தீர்வை விட பயனுள்ளதாக இருக்கும். ஆற்றல் மிக்கதாக இருக்கும். இந்தத் தீர்வு அவரது படைப்பாற்றல் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்து விடுகிறது.

- **கற்பனை ஆற்றலை வளர்த்தல்**

கற்பனையை வெளிப்படுத்தும்போது கிடைக்கக்கூடிய அழகானது படிப்பவரை, பார்ப்பவரைப் பரவசப்படுத்தும். நினைத்து நினைத்து சுவைக்க வைக்கும். வாசகர் மனத்தில் புதிய காட்சிப் படிமத்தை உருவாக்கும்.

கற்பனைத் திறனிலிருந்துதான் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் மலரும். விஞ்ஞானிகள் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்பவர்கள் என்றாலும் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பதில் அவர்களது படைப்பாக்கக் கற்பனை வளம் முதன்மையாக இருக்கிறது.

கற்பனை என்பது ஒரு பொருளை நேரில் அனுபவிக்காத நிலையில் அப்பொருளின் தன்மையை நேரில் காண்பதுபோல் மனக்கண்ணில் கொணர்ந்து நிறுத்துவதாகும். கற்பனை நயம் பாடல்களுக்குச் சிறப்பினைச் சேர்க்கக் கூடியதாகும். கவிதைகளில் இடம்பெறும் கற்பனையின் சிறப்பு பற்றிக் கி.வா.ஜெகந்நாதன் அவர்கள்,

**"கற்பனையாம் பரிக்கே – ஒரு கடிவாளம் என்பதில்லை**
**வெற்பனில் ஏறிவரும் – அந்த விண்ணிலும் பறக்கும்"**

எனப் பாடியுள்ளார்.

சங்கப் புலவர் ஒருவர் நாவல் மரம் ஒன்றைக் கடலருகே காண்கிறார். கருமைநிற நாவல் பழங்களோ உதிர்ந்து கிடக்கின்றன. கருநிற வண்டுகளோ மரத்தருகே பறந்து கொண்டிருக்கின்றன. நிலத்தில் விழுந்த பழங்களை நண்டுகள் உண்ணுகின்றன. இதைக் கண்ட கவிஞர் கற்பனை நயம் தோன்றப் பாட ஆரம்பித்துவிட்டார்.

கருநிறப் பழத்தை இழுத்துச் செல்லும் நண்டுகளை வண்டுகள் சூழ்ந்து கொண்டன; காரணம் வண்டுகளைத் தான் நண்டுகள் இழுத்துச் செல்கின்றன என்ற மயக்கமாகும். இதனை உணர்ந்த நண்டு நாவற்கனியை விட்டுவிட்டதாக அமைந்தது அம்மூவனாரின் கற்பனையில் உதித்த பாடல். அப்பாடல் வருமாறு.

**"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்**
**புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி**
**கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்**
**பல்லால் அலவன் கொண்ட கோட் கூர்ந்து**
**கொள்ளா நரம்பின் இமிரும் பூசல் இரை**
**தேர் நாரை எய்தி விடுக்கும்**
**துறைகெழு மாந்தை அன்ன"**

இவ்வாறான பாடல்களை மாணவர்களிடம் எடுத்துக்கூறி அவர்களின் கற்பனை ஆற்றலைத் தூண்டுவது ஆசிரியரின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

- **அழகுணர் ஆற்றலை வளர்த்தல்**

படைப்பாளர்கள் தங்கள் கற்பனை ஆற்றலால் அழகுக் காட்சியைக் காண்கின்றனர். அந்த அழகுணர்ச்சியை நம்மையும் மனக்கண்ணால் காணச் செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, பாரதிதாசன் அந்திப்பொழுதில் வான் மேகத்தின் இடையில் மிதந்து செல்லும் நிலவைக் கண்டார். அவர் கண்ட காட்சியைக் கற்பனை நயத்துடன் பாடிய சுவைமிகு பாடலைக் காண்போம்.

**நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலா என்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை! உன்**
**கோல முழுதும் காட்டிவிட்டால் காதல்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்**
**சோலையிலே பூத்த தனிப்பூவோ நீ தான்!**
**சொக்க வெள்ளிப் பால்குடமோ, அமுத ஊற்றோ?**

**காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**
**கனல் மாறிக் குளிர் அடைந்த ஒளிப்பிழம்போ!**

**(பாரதிதாசன் கவிதைகள், புரட்சிக்கவி ப,20)**

இவ்வாறான பாடல்களை மாணவர்களின் வயதிற்கும் ஏற்ற வகையில் தேர்ந்தெடுத்து கற்பிக்க வேண்டும். மாணவர்களிடம் அழகுணர்ச்சியை ஏற்படுத்துதல் வேண்டும். இவற்றைக் கற்பிக்கும்போது கற்பனை எது? அழகுணர்ச்சி எது? எனப் பகுத்துப் பார்க்கும் திறனையும் வளர்த்தல் வேண்டும்.

கற்பனையில் உதிப்பது கவிதை; அந்தக் கவிதையில் மிதப்பது அழகுணர்ச்சி. கற்பனையும் அழகுணர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை; இயைந்தவை. இவற்றின் தரம் குறைந்தால் கவிதையின் சிறப்புக் குறையும்.

- **எழுதும் திறனை வளர்த்தல்**

எழுதும் திறன் (writing skill) என்பது வாழ்க்கைத் திறன்களில் ஒன்றாகும். இத் திறனை ஒருவர் எக்காலத்திலும் வளர்த்துக் கொள்ளலாம். இளமைப் பருவத்திலும் எழுதும் திறன் வளரும்; முதுமைப் பருவத்திலும் மலரும். வயது ஒரு தடையல்ல. எழுத வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும். எதை எழுத வேண்டும் என்ற நோக்கம் வேண்டும். யாருக்காக எழுதுகிறோம் என்பதில் ஒரு புரிதல் வேண்டும்.

பயிற்சியும் முயற்சியும் இருந்தால் எழுதும் திறனில் வளர்ச்சி காண முடியும். உழைப்பின்றி உயர்வில்லை. எழுதும் கலை என்பது ஒருவரது படைப்பாற்றலுடன் (Creativity) தொடர்புடையது. ஒருவரது எழுத்து வளரும்போது படைப்பாற்றல் வளர்கிறது. படைப்பாற்றலின் ஒரு பகுதியாக எழுதும் திறனும் அமைந்துள்ளது. நேரில் கண்ட ஒரு நிகழ்வைக் கட்டுரையாகவும் எழுதலாம்; கதையாகவும் எழுதலாம்; நாடகமாகவும் ஆக்கலாம் ஏன், கவிதையாகவும் கூட எழுதலாம்.

மனத்தில் தோன்றிய எண்ணங்களைக் (Thoughts) காட்சிப் படிமங்களை (Visual images) உணர்ச்சிகளை (Feelings) எழுத்து வடிவில் கொண்டு வருவது ஒரு கலை. அதற்குத் தனித் திறமை இருக்க வேண்டும்.

சித்திரமும் கைப்பழக்கம் என்பது போல் எழுத எழுத எழுத்துத்திறன் வளரும். எழுத்தால் உயர்வு வரும். எழுத்து வித்தையைப் பயிலப்போவது உங்கள் விரல்கள் மட்டுமல்ல; மனமும்தான்! உங்களுக்கு எழுதும் திறன் இருந்தால் போதும், உங்கள் விரல்கள் வெட்டப்பட்டிருந்தாலும் எழுத முடியாமல் கட்டப் பட்டிருந்தாலும் வாய்ச் சொற்களில் எழுத்து மலர்கள் பூக்கும்!

'இழந்த சொர்க்கம் (Paradise Lost)' எழுதியபோது மில்டனுக்குப் பார்வை இல்லை. விழிகளில் ஒளியில்லை எனினும் அவரின் எழுத்துகள் மின்னின. அவருடைய அருமை மகளின் உதவியோடு, 'இழந்த சொர்க்கம்' தோன்றியது.

### 1.4.1 படைப்பாற்றலை வளர்க்கும் பழகு செயல்கள்

மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்க்கப் பல்வேறு பயிற்சிகளைத் தரலாம்.

- **தலைப்புத் தருதல்**

ஏதேனும் ஒரு தலைப்பை மாணவர்களுக்குக் கொடுத்து, அவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் சிந்திக்கச் செய்யலாம். ஒவ்வொரு குழுவும், அது முடிவு செய்யும் வடிவத்தில், அத் தலைப்புத் தொடர்பாக, ஒரு படைப்பைக் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட பக்கங்களுக்குள் அளிக்கவேண்டும் என அறிவுறுத்தலாம். அவற்றை வேறு ஒரு சமயத்தில் வகுப்பில் படித்துக் காட்டி மற்றவர் கருத்தறியச் செய்யலாம்.

- **குறிப்புகள் தருதல்**

குறிப்பிட்ட ஒரு சிக்கலைக் குறிப்புகளாக மாற்றி மாணவர்க்குத் தரலாம். அவற்றை வெவ்வேறு குழுவினர் படைப்பாக மாற்றி வகுப்பில் வெளியிட வேண்டும். முன்போலப் பிறர் கருத்தறிந்தபின் செழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

- **முடிவுகூறச் செய்தல்**

கதைகளின் முடிவை வெளியிடாமல் பொருத்தமான முடிவுகளைக் குழுவாகச் சிந்தித்து வெளியிடக் கூறலாம்; சிறந்த முடிவுகளைப் பாராட்டலாம்.

- **முடிவை மாற்றச் செய்தல்**

கதையின் முடிவை விவாதிக்கச் செய்தல். இருக்கும் பழைய முடிவை மாற்றிவிட்டுப் புதிதாக ஒவ்வொரு குழுவும் ஒரு முடிவை வெளியிடச் செய்யலாம். புதிய முடிவுகளுள் சிறந்த ஒன்றை மாணவர்களே தேர்ந்தெடுக்கச் செய்யலாம். சிறந்த முடிவாக அமைந்ததற்கான காரணங்களை விளக்கச் செய்யலாம். சிறந்த முடிவைத் தேந்தெடுத்த குழுவினரையும் விளக்கம் அளித்த மாணவர்களையும் பாராட்டலாம்.

- **வடிவம் மாற்றுதல்**

கதை வடிவில் உள்ளவற்றை நாடகம், கவிதையில் செய்யுள் வழக்கு, புதுக்கவிதை, உரையாடல் போன்றவையாக மாற்றச் செய்யலாம். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வடிவத்தை எடுத்துக் கொள்ளலாம்.

- **வகை மாற்றுதல்**

ஒரே வடிவத்தில் அதன் வகைகளுக்குள் மாற்றம் செய்யச் சொல்லலாம். எடுத்துக் காட்டாக, யானை என்னும் தலைப்பில் ஒரு குழு விளக்கக் கட்டுரை எழுதலாம்; மற்றொரு குழு தன் வரலாறு கூறுதலாக எழுதலாம்; வேறொரு குழு உரையாடலாக எழுதலாம். இப்படி ஒரு வடிவத்திற்குள்ளேயே அதன் வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதச் செய்யலாம்.

- **ஈற்றடி தருதல்**

இது செய்யுள் வடிவத்திற்கு ஏற்ற செயல்பாடு. ஒரு பாடலின் ஈற்றடியைக் கொடுத்து விட்டு, அதற்கேற்றவாறு பிற அடிகளை எழுதப் பழக்கலாம்.

## 1.5 படைப்பாற்றல் கல்வி

### படைப்பாற்றல் கல்வி

மாணவர்கள் தாமாகவே கற்றல் செயல்பாட்டில் மனவரைப்படம் மூலமாக தன் மனத்தில் பதிய வைத்ததை மிக எளிமையானமுறையில் எடுத்துரைப்பதே படைப்பாற்றல் கல்வி எனப்படும்.

### 1.5.1 படைப்பாற்றல் பற்றிய உளவியல் கோட்பாடுகள்

படைப்பாற்றல் பற்றி நான்கு வகையான உளவியல் கோட்பாடுகள் உள்ளன. அவை,

1. நுண்ணறிவின் சிறப்பான நிலை
2. சிறப்பான உளநலம்
3. ஆதிக்கப் போக்கின் எதிர்ப்பு
4. குழந்தைகளிடம் பெற்றோர்களின் மனப்பான்மை

### 1. நுண்ணறிவின் சிறப்பான நிலை

கில்போர்ட்டின் கருத்துப்படி, படைப்பாற்றலுக்குத் துணை செய்யக்கூடிய பல்வேறு கூறுகள் நுண்ணறிவின் அமைப்பில் சிறப்பாகக் காணப்படுவதே ஒருவனிடம் இத்திறன் மிகுந்து காணப்படுவதற்கு அடிப்படை என்பதாகும்.

### 2. சிறப்பான உளநலம்

சிறப்பான உளநலம் (Mental Health) உள்ளவர்களிடம் படைப்பாற்றல் மிகுந்திருக்கும் என்பது மற்றொரு கருத்தாகும். உளநலம் உடையவர்களது உள்ளம் திறம்படச் செயலாற்றவல்லது. தன் முழு ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதில் உள்ள ஆர்வம் (Self Actualization), தன்னைப் பற்றிய ஆக்க முறையில் அமையும் தற்கருத்து (Self Concept) பெற்றிருத்தல், மிகுதியான தன்மதிப்பு (Ego Strength) போன்ற பண்புகள் உளநலம் மிகுந்தவனிடம் மிகுதியாகவே காணப்படும். இது படைப்பாற்றலைத் தோற்றுவிக்கும் எனப்படுகிறது.

### 3. ஆதிக்கப் போக்கின் எதிர்ப்பு

ஆதிக்கப்போக்கு காணப்பட்டால் அதற்கு எதிர்ப்பாக, ஆக்கத்திறன் வெளிப்படும் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

### 4. குழந்தைகளிடம் பெற்றோர்களின் மனப்பான்மை

உளப்பகுப்புக் கோட்பாட்டினர் குழந்தைகளிடம் தந்தை, தாய் ஆகியோர் கொண்டுள்ள மனப்பான்மையின் விளைவாக ஆக்கத்திறன் மிகுந்த நிலையோ, குறைந்த நிலையோ எழக்கூடும் என்பர். இக்கருத்து ஓரளவு சிக்கலானது.

- **ஆக்கச் சிந்தனையின் படிநிலைகள்**

புதியனவற்றைக் கண்டுப்பிடித்தலுக்கான ஆக்கச் சிந்தனையில் நான்கு படிகள் இருப்பதாகக் கிரகாம் வாலஸ் என்ற உளவியல் வல்லுநர் தெரிவித்துள்ளார். அவை,

1. ஆயத்தம் (Preparation)
2. உள்வளர்ச்சி (Incubation)
3. விளக்கம் தோன்றல் ( Illumination)
4. சரிபார்த்தல் (Verification)

### 1. ஆயத்தம் (Preparation)

முதலில் சிக்கலைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்பு அச்சிக்கலை வரையறை செய்தல், ஒருமுகப்படுத்துதல், அதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல், பகுத்தாய்தல், இவற்றின்மூலம் தீர்வுகாண தன்னைத்தானே உளரீதியாக ஆயத்தப்படுத்திக்கொள்ளும் நிலையாகும்.

### 2. உள் வளர்ச்சி (Incubation)

சிக்கல்களைத் தீர்ப்பதற்கான செயல்முறைகளை வெளிப்படுத்தாமல், முன் அனுபவத்தையும் பெறப்பட்ட தகவல்களையும் புதிய கோணத்தில் இணைத்துச் சிந்தித்தலைக் குறிப்பதாகும். நம்மை அறியாமல் ஏற்படும் உள் வளர்ச்சியின் காரணமாக சில நேரங்களில் உடனடியாகத் தீர்வு தோன்றிவிடும். இதனையே உள் வளர்ச்சி என்று கூறுகின்றோம்.

### 3. விளக்கம் தோன்றல் (Illumination)

சிக்கலுக்கான விளக்கம் சில நேரங்களில் மனத்தில் திடீரென உள்ளொளி போலத்தென்படும். எடுத்துக்காட்டாக, கணிதமேதை இராமானுஜம் தன் கனவில் பல கணித உண்மைகள் பளிச்சிட்டதைக் குறிப்பிடுகின்றார். ஆக்கச் சிந்தனையாளர்கள் பெரும்பாலோர் அவர்களுடைய கருத்துக்கள் திடீரெனத் தோன்றுவதாகவும் அது ஒரு உள்ளுணர்வாகப் பெறப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

### 4. சரிபார்த்தல் (Verification)

சிந்தித்து அறிந்த தீர்வின் தன்மை சரிபார்க்கப்படுகிறது. உள் வளர்ச்சி, உள்ளொளி தோன்றல் இவ்விரண்டு நிலைகளும் அறிவியல் ஆக்கச்சிந்தனைக்கும், கலையழகு ஆக்கச்சிந்தனைக்கும் பொதுவாகக் காணப்படுகின்றன.

### 1.5.2 படைப்பாற்றலின் இயல்புகள்

படைப்பாற்றல் கீழ்க்காணும் இயல்புகளைக் கொண்டதாக அமையும் என்று உளவியலாளர்கள் பட்டியலிட்டுக் கூறுகின்றனர்.

1) ஒரு செயல்முறையைக் கொண்டது
2) தனிச்சிறப்புடைய கற்பனையால் விளைவது

3) தனித்துவமானது
4) விரிசிந்தனையுடன் தொடர்புடையது
5) புதுமைகளின் விளைவுகளுக்கு வழிவகுக்கக் கூடியது
6) சிந்தனை வளர்ச்சியுடன் தொடர்புடையது
7) நுண்ணறிவுடன் கட்டாயத் தொடர்பற்றது
8) மனித முன்னேற்றத்திற்கு ஆதாரமானது

### 1.5.3 படைப்பாற்றலின் கூறுகள்

அறிவியல் அறிஞர் எடிசனை நாம் அறிந்திருப்போம். அவரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சி கூறப்படுவது உண்டு. ஓர் இயந்திரம் இயங்காமல் போகவே, அதனைச் சரிசெய்ய எடிசனின் உதவியை நாடினர். எடிசன், ஒரு சில நிமிடங்கள் இயந்திரத்தைச் சுற்றிப் பார்த்தார். பிறகு ஒரு சிறு சுத்தியலை எடுத்தார். ஒரு குறிப்பிட்ட இடத்தை ஓங்கித் தட்டினார். உடனே இயந்திரம் இயங்கத் தொடங்கியது. இதற்காக 100 காசுகள் கேட்டார் எடிசன். இதனைக் கேட்ட இயந்திரத்தின் உரிமையாளர், 'ஓர் அடி அடித்தற்காகவா 100 காசுகள்' என்றாராம். அதற்கு எடிசன், 'அடித்ததற்கு 1 காசுதான்; ஆனால் எங்கு அடிக்க வேண்டும் என்று சிந்தித்து முடிவெடுத்தற்கு 99 காசுகள்' என்றாராம். இந்நிகழ்வில் ஆக்கத்திறனின் வெளிப்பாட்டை நாம் காணலாம்.

படைப்பாற்றலின் பண்புகளை உளவியல் அறிஞர்கள் பலர் ஆராய்ந்து பல நிலைகளில் கூறியுள்ளனர். "திறந்த மனத்துடன்(Openness) சிந்தித்தல்" ஆக்கத்திறனுக்கு ஆதாரம் என்பது ரோஜர்ஸ் (Rogers) என்பாரது கருத்தாகும். கில்பர்ட் அவர்கள் "விரிசிந்தனையை" (Divergent thinking) படைப்பாற்றலின் கருவாகக் குறிப்பிடுகிறார். ஏனெனில் ஒரு சிக்கலை நன்கு ஆராய்ந்து, அதன் பல்வேறு பரிமாணங்களையும் சிந்தித்து ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வுமுறைகளைச் சிந்திப்பது விரிசிந்தனையாகும். இது படைப்பாற்றலுக்கு அடிப்படையாக உள்ளது. கில்பர்ட்டின் கருத்துப்படி,

- சிக்கல்கள் பற்றிய நுண்ணுணர்வு (Sensitivity to Problems)
- சிந்தனையில் நெகிழ்ச்சி (Flexibility in thinking)
- தனித்தன்மையுடன் சிந்தித்தல் (Originality in thinking)
- அகக்காட்சி அல்லது உட்காட்சித் தாவல் (Intuitive leap)
- பொருளறிவினைத் தேவையெழும்போது எளிதாக மீட்டுக்கொணரும் திறன் (facility of information retrieval)

- பெற்றுள்ள பொருளறிவினை மேலும் விரிவுபடுத்தி வளர்த்தல் அல்லது முழுமையாக்குதல் (Elaboration abilities)
- பொருளறிவின் எவ்விவரம் தேவையென அறிந்து மதிப்பிடும்திறன் (Evaluative abilities)

போன்ற கூறுகள் ஆக்கத்திறனுள் அடங்கும்.

### 1.5.4 படைப்பாற்றல் வெளிப்பாடு

படைப்பாற்றல் அல்லது ஆக்கத்திறன் என்பது புதிய கருத்துக்களை, கருத்துருக்களை, பொருள்களை உருவாக்கக் கூடிய சிந்தனையையும் அதைச் செயற்படுத்த வல்ல ஆற்றலையும் குறிக்கிறது. படைப்பாற்றலை ஏதுவாக்குவதில் சமூகச் சூழலுக்கும் முக்கியப் பங்கு உண்டு எனலாம். பொதுவாகப் படைப்பாற்றல் கலைகளுடனும் இலக்கியத்துடனும் இணைத்துப் பார்க்கப்பட்டாலும் பொறியியல், அறிவியல், கட்டிடக்கலை, நகைச்சுவை, வணிகம் என பல துறைகளிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது. படைப்பாற்றல் சிலருக்கு இயல்பாக அமைந்தாலும், பெரும்பான்மையானோர் இதைப் படிப்பறிவாலும் பட்டறிவாலும் பெறுகின்றனர். இவ்வாறு வெளிப்படும் படைப்பாற்றலை,

1. மொழி சார்ந்த படைப்புகள்
2. மொழி சாராத பிற படைப்புகள்

என்ற இரண்டு நிலையில் வகைப்படுத்தலாம்.

- **மொழி சார்ந்த படைப்புகள்**

படைப்பாற்றல் திறன் பெற்றவர்கள் தங்கள் சிந்தனையில், அனுபவத்தில், கற்பனையில் உருவாகும் ஒன்றனை மொழியின் உதவியுடன் வெளிப்படுத்த முயலுவர். அவ்வாறு வெளிப்படுத்துவதை இருநிலைகளில் நாம் காணலாம்.

1) புதியதாக ஒன்றனை உருவாக்குவது
2) ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்குவது (அ) வடிவம் மாற்றுவது

புதியதாக ஒன்றனை உருவாக்குவது என்பது, ஒருவர்க்கு ஏற்படும் சிந்தனை ஆற்றலின் விளைவாகப் பாடல், கதை, கவிதை, கட்டுரை, நாடகம் போன்றவற்றை உருவாக்குவதைக் கூறலாம்.

ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்குவது (அ) வடிவம் மாற்றுவது என்பது ஏற்கனவே ஒரு வடிவத்தில் உள்ள படைப்பை வேறு ஒரு வடிவத்தில் மாற்றுவதாகும். எடுத்துக்காட்டாக, செய்தியை உரையாடலாக்குதல், உரையாடலை கட்டுரையாக்குதல் போன்றவையாகும்.

- **மொழி சாராத பிற படைப்புகள்**

படைப்பாளிகள் தங்கள் படைப்பாற்றலை இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடம் போன்ற நுண்கலையாக வெளிப்படுத்துவர். அல்லது சமூகத் தேவைகளுக்கு ஏற்பவோ சிக்கலுக்குத் தீர்வு காணும் நோக்கிலோ புதிய தொழில்நுட்பக் கருவிகள், கோட்பாடுகள் ஆகியவற்றை உருவாக்குவர். இவை மொழி சாராத படைப்புகளாகும்.

### 1.5.5 படைப்பாற்றலுக்கான தடைகள்

படைப்பாற்றலுக்குப் பல தடைகளும் இருக்கின்றன. அவையாவன:

#### 1. தயக்கம்

தன்னுள் எழும் படைப்பாக்கச் சிந்தனையை யாரேனும் விமர்சிக்கக் கூடும் என்ற மனப்பான்மை பலரிடம் உள்ளது. இம்மனநிலை அவர்களின் படைப்பாற்றல் திறனைத் தடுக்கும் முதல் காரணியாகும்.

#### 2. உடல் நலமின்மை

**'உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'** என்பார் திருமூலர். உடல் நலம் உயிரைக் காப்பது மட்டுமின்றி மனநலத்துடனும் தொடர்புடையதாகும். உடலமின்மை படைப்பாற்றலைத் தடுக்கும் காரணியாக விளங்குகிறது.

#### 3. உடல் நலத்தைக் கெடுக்கும் பணி நிலைமை

தற்காலச் சூழலில் உடல்நலத்தைக் கெடுக்கும் முதல் காரணியாக நாம் செய்யும் பணி நிலைமைக் காணப்படுகிறது எனவும் அது படைப்பாற்றலுக்கான தடையாகவும் உள்ளதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

### 4. விஷயங்களை ஒரே கோணத்தில் பார்க்கும் பழக்கம்

ஒரு விஷயத்தைப் பல கோணத்தில் சிந்தித்தால் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுக் காணப்படுவோம். ஆனால் சிலர் ஒரு விஷயத்தை ஒரே கோணத்தில் பார்க்கும் பழக்கம் கொண்டவர்களாக இருப்பர். இது இவர்களின் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணரவிடாமல் தடுக்கும் காரணியாகும்.

### 5. போதுமான தகவல்களைத் திரட்டிக் கொள்ளாததால் ஏற்படும் மனச் சோர்வு

ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்குத் தேவையாக அனைத்துத் தகவல்களையும் திரட்டிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் சிக்கலைத் தீர்க்க இயலாமல் மனச் சோர்வினை ஏற்படுத்திவிடும்.

### 6. விடாமுயற்சி இன்மை

தனக்குள் தோன்றும் சிந்தனையை வெளிப்படுத்த முனையும் போது ஏதாகினும் தடை ஏற்பட்டால் அப்படியே நிறுத்திவிடும் மனப்போக்குச் சிலருக்கு உள்ளது. ஒரு செயலை முடிக்க வேண்டும் என்ற விடாமுயற்சி இன்றி இருப்பதும் ஒரு தடையாகும்.

### 7. ஈடுபாடு இல்லாமை

ஒரு செயலில் சிக்கலைத் தீர்ப்பதில் ஈடுபாடு இல்லாமல் காணப்படுவர். அவ்வாறு இருப்பின் அவர்களிடம் படைப்பாற்றல் வெளித்தோன்றாது.

### 8. ஒருவரது படைப்பாக்கச் சிந்தனை, வளம் குறித்து குறைவாக மதிப்பிடுதல்

ஒருவர் தனக்குள் இருக்கும் ஆற்றலை குறைவாகவே மதிப்பிடுவர். இதனைத் தாழ்வு மனப்பான்மை என்றும் கூறுவர். அவ்வாறு இருத்தல் படைப்பாக்கச் சிந்தனைக்கான தடைக்கல்லாகும்.

### 9. முன்கூட்டியே முடிவெடுத்தல்/ தீர்ப்பு கூறுதல்

ஒரு சிக்கலைப் பற்றி ஆராயாது முன்கூட்டியே முடிவெடுப்பர். இப்படி இருப்பவர்களை முந்தரிக் கொட்டை, அவசரக் குடுக்கை என்று வழக்கத்தில் கூறுவதுண்டு. இந்நிலையில் இருப்பவர்கள் உண்மை நிலையை

ஆராய்வதில்லை. மற்றவர்களின் கருத்துகளையும் செவிமடுப்பதில்லை. இந்நிலையும் படைப்பாற்றலைத் தடுப்பதாகும்.

### 9. முன்கூட்டியே முடிவெடுத்தல்/ தீர்ப்பு கூறுதல்

ஒரு சிக்கலைப் பற்றி ஆராயாது முன்கூட்டியே முடிவெடுப்பர். இப்படி இருப்பவர்களை முந்தரிக் கொட்டை, அவசரக் குடுக்கை என்று வழக்கத்தில் கூறுவதுண்டு. இந்நிலையில் இருப்பவர்கள் உண்மை நிலையை ஆராய்வதில்லை. மற்றவர்களின் கருத்துகளையும் செவிமடுப்பதில்லை. இந்நிலையும் படைப்பாற்றலைத் தடுப்பதாகும்.

### 10. இதர சமூகவியல், பண்பாட்டுத் தடைகள்

ஒருவர் வாழும் சமூகம் சார்ந்தும் பண்பாட்டுக் கூறுகள் சார்ந்தும் ஏற்படும் தடைகளாகும். தற்காலச் சூழலில் இந்நிலை மாறிக்கொண்டு வருகிறது எனலாம்.

### 1.5.6 படைப்பாற்றல் மிக்கோரின் ஆளுமைப் பண்புகள்

படைப்பாக்கத்திறன் மிகுதியாகப் பெற்றுள்ளவர்களிடம் சில பண்புகள் (Indicators of creative talent) உள்ளன. அவற்றின் வெளிப்பாடே அவர்களைப் படைப்பாற்றல் மிக்கவர்களாகக் காட்டுகிறது. இப்பண்புகள் இத்தகையோரிடம் காணப்படும் ஆளுமைப் பண்புகளாகும்.

- இத்தகையோர், பிறர் கூறுவதைக் கேட்பது, நிகழ்ச்சிகளை உற்றுநோக்குவது, செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருப்பர்.
- உற்சாகத்துடனும் வலுவுடனும் இவர்கள் செயலாற்றுவார்கள்; படிப்பது, எழுதுவது, ஓவியம் வரைவது போன்றவற்றில் அதிக நேரம் செலவிடுவார்கள்; இவர்களது பேச்சில் உவமைகள் மிகுந்திருக்கும்.
- பிறர் கூறுவதை இவர்கள் உடனடியாக ஏற்றுக்கொள்வதில்லை. எந்தச் சிக்கலையும் பல கோணங்களில் அலசிஆராயும் போக்கு இவர்களிடம் பெருமளவு காணப்படும்.
- ஆக்கத்திறன்மிக்கோர் தெளிவாகவும் வேகமாகவும் பேசக்கூடியவர்கள். இவர்களது பேச்சில் கருத்துகள் தங்கு தடையின்றி வேகமாக வெளிப்படும். தொடர்பற்ற கருத்துக்கள் எனத் தோன்றும் கருத்துகளையும்

தொடர்புப்படுத்திக் காட்டக்கூடிய திறமை இவர்களது பேச்சில் வெளிப்படும்.

- இத்தகையோர் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய சூழ்நிலையில் சிறப்பாகச் செயற்படுவர். ஆனால், கட்டுப்பாடுகளும் தடைகளும் மிகுந்துள்ள சூழ்நிலை இவர்களது ஆக்கத்திறன் வெளிப்படுவதற்குப் பெரும் தடையாக அமையும்.
- முன்பே கூறியபடி, இவர்களது சிந்தனையின் போக்கு புதிய முடிவுகளைத் தரக்கூடிய விரிசிந்தனையாக அமையும். ஆக்கத்திறன்மிக்கோர் ஏதாகிலும் ஒன்றனைப் பற்றிச் சிந்தித்தபடி இருப்பர். இத்தகைய சிந்தனையிலே மூழ்கி இருப்பதும் அவர்களது ஆளுமைப் பண்பாகும்.
- ஒரு சிக்கலுக்கு ஒரு தீர்வு ஏற்பட்டுவிட்டால் அவர்கள் அவற்றை விடுவதில்லை. வேறு தீர்வுகள் உள்ளனவா எனச் சிந்தித்துக்கொண்டே இருப்பர். இந்நிலை பிறரால் நகைப்புக்கு உள்ளாகும் நிலையையும் ஏற்படுத்தலாம். ஆனால் அதனைப் பற்றிக் கவலைப்படாமல் அவ்விளைவுகளை மேலும் ஆராயத் தொடங்குவர்.
- ஆக்கத்திறன் மிக்கோர் தங்களது உணர்ச்சிகளை மூடி மறைக்காமல் வெளிப்படையாகக் காட்டும் பண்புள்ளவர்கள். இப்பண்பு உள்ளவர் ஆக்கத்திறன் மிகுந்தவராக இருக்கக்கூடும் என்பதைக் குறிப்பிடுவனவாம் என்று ஆக்கத்திறன் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்த டாரென்சு (Torrence) என்பவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 1.5.7 படைப்பாற்றலை வளர்ப்பதில் பெற்றோர்களின் பங்கு

குழந்தைகளிடம் வெளிப்படும் படைப்பாற்றல் திறனை முறைப்படி வழிநடத்தும் பொறுப்பு பெற்றோர்களுடையதாகும். ஏனெனில் பெற்றோர்களே முதல் ஆசிரியர்கள். பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் நம்பிக்கை அவர்களைத் தனித்தன்மை உடையவர்களாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

சான்றாக, 1993இல் வெளிவந்து உலகைக் கலக்கிய ஜுராஸிக் பார்க்கை இயக்கிய ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் வளர்ந்த விதம் சுவாரசியமானது. இளம் வயதிலேயே அவர் திரைப்படம் எடுப்பதில் ஆர்வம் உள்ளவராக இருந்தார். அதற்கான படைப்பாற்றல் திறன் அவருக்கு இயல்பாகவே இருந்தது. அத்திறனைத் தூண்டிவிட்டு அவரை உற்சாகப்படுத்தி அவரைப் பரிணமிக்க வைத்த பெருமை அவரது தாயான லீயையே (Leah) சேரும்.

இளம் வயதில் ஸ்பீல்பெர்க் பாய் ஸ்கவுட்டில் (Boy Scout) சேர்ந்திருந்தார். ஒரு குட்டித் திரைப்படத்தைத் தயாரித்து அந்தத் தயாரிப்பிற்கான மெரிட் பாட்ஜைப் (Merit Badge) பெற வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்தது. அப்போது அவருக்கு வயது 12 தான்!

சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்த தாயாரிடம் சென்று தன் ஆசையைக் கூறினார். "வெளியே போய் விளையாடு. வேண்டாத வேலையில் எல்லாம் ஈடுபடாதே" என்று விரட்டவில்லை. மாறாக அவரை உற்சாகப்படுத்தினார். அதற்கான உதவிகளையும் செய்தார்; ஏன் அவரே நடிக்கவும் செய்தார்! ஸ்பீல்பெர்க் ஒரு திகில் படத்தை எடுக்க விரும்பினார். அதில் ஒரு காட்சியில் சமையலறை காபினெட்டிலிருந்து ரத்தம் குபுகுபுவெனப் பொங்கி வர வேண்டும். அம்மாவிடம் காட்சியைப் பற்றிக் கூறினார். உடனே அவர் கடைவீதிக்குச் சென்று 30 செர்ரி கேன்களை வாங்கி வந்தார். அதை சமையலறை காபினெட்டில் ஊற்றி ரத்தம் பொங்கி வரும் காட்சியை எடுக்கச்செய்தார். படம் வெற்றியானது. ஸ்டீவனுக்கு மெரிட் பேட்ஜும் கிடைத்தது.

ஸ்டீவனின் தாய் அத்துடன் நின்றுவிடவில்லை. அவர் தன் மகனுக்காக வீட்டையே ஸ்டூடியோவாக மாற்ற அனுமதியளித்தார். அவ்வப்பொழுது ஸ்டீவன் எடுக்கும் காட்சிகளுக்குத் தேவைப்படும் பின்னணி அமைப்புகள், பாத்திரங்களின் உடைகளை அவரே தயார் செய்து கொடுத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பு எனில் அதற்கும் ஏற்பாடுகள் செய்தார். இப்படி அனைத்து விதத்திலும் அவரின் தாயார் அளித்த ஊக்கமும் உறுதுணையுமே அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

இவ்வாறாகக் குழந்தையின் படைப்பாற்றலை வளர்க்கப் பெற்றோர் அவர்களை ஊக்குவித்து அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

### 1.5.8 படைப்பாற்றலை வளர்ப்பதில் பெற்றோர்களின் பங்கு

இயல்பான உணர்வுகளைத் தூண்டித் துலங்கச் செய்யும் பொறுப்பு பெற்றோர்களுக்கு அடுத்து ஆசிரியருக்கு உரியதாகும். குழந்தைகளின் படைப்பாற்றல் திறனைக் கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துதல் வேண்டும். ஏனெனில், குழந்தைகளின் சிந்தனைத் திறன் என்பது மிகவும் அலாதியானது; பரந்துபட்டது. அதை நாம் சாதாரணமாக எடை போட்டுவிட முடியாது. ஆனால், பல நேரங்களில் குழந்தைகளின் சிந்தனைத் திறனை நாம் குறைத்தே எடை போடுகிறோம். அவர்களுக்குத் தெரிந்தது இவ்வளவுதான் என நாமாகவே

நினைத்துக்கொண்டு அதற்கேற்றார்போல் நடந்துகொள்கிறோம். ஆனால், பல நேரங்களில் நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பாகச் செயல்பட்டு குழந்தைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்கள்.

சான்றாக, தொடக்கநிலை வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு ஒரு போட்டி நடத்தப்பட்டது. நேர்மையை வலியுறுத்தும் வகையில் ஒவ்வொருவரும் கதை கூற வேண்டும். வீட்டில் பெற்றோரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு மறுநாள் வகுப்பில் அதை நீங்கள் சொல்ல வேண்டும். ஆனால், அனைவருக்கும் தெரிந்த கதைகளைக் கூறக்கூடாது என்ற விதிமுறையுடன் அப்போட்டி அறிவிக்கப்பட்டது.

அடுத்த நாள், வகுப்பில் முகத்தில் உற்சாகத்துடன் குழந்தைகள் காத்திருந்தனர். எல்லா குழந்தைகளும் தாங்கள் தெரிந்துகொண்டு வந்த கதையை உடனே சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்புடன் இருந்ததை அவர்களது முகத்தில் தெரிந்தது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு கதையைச் சொல்லிக் கைதட்டல் வாங்கிச் சென்றனர். ஒரு குழந்தை சொன்ன கதை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

கதை இதுதான்…

ஓர் ஊரில், ஓர் அரசன் இருந்தான். அவன் தன் நாட்டைச் சேர்ந்த சிறு குழந்தைகள், படிக்கும் பிள்ளைகள் எந்த அளவுக்கு நேர்மையானவர்களாக இருக்கிறார்கள் என அறிந்துகொள்ள நினைத்தான். அதற்காக, பள்ளிக் குழந்தைகளை அழைத்து ஆளுக்கு ஒரு விதையைக் கையில் கொடுத்தான். இதை வீட்டில் உள்ள தொட்டியில் போட்டு, தண்ணீர் ஊற்றி வளர்த்து வாருங்கள். இரு வாரத்திற்குப் யாருடைய செடி நன்றாக வளர்ந்திருக்கிறதோ, உரிய பரிசும் வழங்கப்படும் என்று அறிவித்தான். குழந்தைகள் அனைவரும் வரிசையில் நின்று ஆளுக்கு ஒரு விதையை வாங்கிச் சென்றனர்.

அரசன் கூறிய நாளும் வந்தது. அவரவர்கள் தங்கள் தொட்டியை எடுத்து வந்தனர். அவர்கள், கொண்டு வந்த தொட்டியில் விதைகள் முளைத்திருந்தன. ஒரு சில தொட்டிகளில் மிகவும் நன்றாகவே செடிகள் வளர்ந்திருந்தன. ஒவ்வொரு தொட்டியாகப் பார்த்துக்கொண்டே வந்த மன்னன் ஒரு தொட்டியின் அருகில் நின்றான். அந்தத் தொட்டியில் வெறும் மண்ணைத் தவிர எதுவுமே இல்லை.

அந்தக் குழந்தையிடம், 'ஏன் விதை முளைக்கவில்லை? என்று கேட்டான் அரசன். அதற்கு அந்தக் குழந்தை, 'அரசே! நீங்கள் கொடுத்த விதையை நான் இந்தத் தொட்டியில் போட்டுத் தண்ணீர் ஊற்றி மிகக் கவனமாகப் பராமரித்து வந்தேன். ஆனால், இவ்வளவு நாள்களாகியும் விதை முளைக்கவில்லை. ஏன் என்று தெரியவில்லை. ஒருவேளை தரமில்லாத விதையாக இருக்கலாம்! என்று கூறியது. அரசர் கொடுத்த விதை தரமற்றது என்று அவரிடமே கூறுகிறதே, என்ன ஆகப் போகிறதோ? எனப் பலரும் அஞ்சினர்.

ஆனால், அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அரசன் அந்தக் குழந்தைக்குப் பரிசும் பாராட்டும் வழங்கினான். 'இந்தப் பிள்ளைதான் உண்மையிலேயே நேர்மையான குழந்தை!' என்றும் அறிவித்தான். அமைச்சர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'எப்படி மன்னா..? எதை வைத்து இந்தப் பிள்ளையை நேர்மையாளர் எனத் தேர்ந்தெடுத்தீர்கள்?' எனக் கேட்டனர். அதற்கு அரசன் கூறினான், 'அமைச்சர்களே! நான் கொடுத்த விதைகள் அனைத்தும் நன்கு வறுக்கப்பட்ட விதைகள். அவை ஒருபோதும் முளைக்காது. நான் கொடுத்த விதை வளரவில்லை என்று தெரிந்தவுடன், பரிசுக்கு ஆசைப்பட்டு வேறு ஏதோ ஒரு விதையைப் போட்டு செடியை வளர்த்துள்ளனர். ஆனால், இந்தக் குழந்தையோ நான் கொடுத்த விதையை மட்டும் போட்டு வளர்த்திருக்கிறது. அதனை அப்படியே எடுத்து வந்து உண்மையை எடுத்துக் கூறியிருக்கிறது. எனவே இந்தக் குழந்தைதான் நேர்மையான குழந்தை!' என்றான். அதனைக் கேட்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். இப்படிக் கூறி கதையை முடித்தான் அந்த மாணவன்.

அனைவரும் கைகளைத்தட்டி அந்த மாணவனை ஊக்கப்படுத்தினர். ஆனால், ஒரே ஒரு குழந்தை மட்டும் கைதட்டாமல் எழுந்து நின்றது. அக்குழந்தை கேட்ட வினாக்கள் அனைவரையும் வியக்க வைத்தது. அக்குழந்தை தொடர்ந்தது. நேர்மையைச் சோதிக்க நினைத்த அரசன், நல்ல விதைகளைத்தானே கொடுத்திருக்க வேண்டும். அவர் ஏன் வறுத்த விதைகளைக் கொடுத்து எல்லாரையும் ஏமாற்றினார். நல்ல விதைகளைக் கொடுக்காமல் ஏமாற்றிய அரசன் எப்படி நேர்மையாளராக இருக்க முடியும்? என்று வினாக்களை அடுக்கிக்கொண்டே போனது.

இந்நிகழ்வு, குழந்தைகளின் சிந்தனைத் திறனை ஒருபோதும் குறைத்து எடை போடக் கூடாது என்பதை உணர்த்துகிறது. இன்றைய குழந்தைகளின் சிந்திக்கும் திறன் கணிக்க முடியாத அளவிற்கு நம்மை வியக்க வைக்கிறது. இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு நாளும் அவர்கள் பார்க்கக்கூடியவை, அவர்களைத் தாமாகவே சிந்திக்கத் தூண்டுகின்றன. குழந்தைகளைச் சுற்றி

நடக்கக்கூடிய சிறு சிறு நிகழ்வுகள்கூட அவர்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன. அதனால்தான் இந்தத் தலைமுறை குழந்தைகள் சிறந்த அறிவாளிகளாக, படைப்பாளிகளாக உருவெடுக்க முடிகிறது.

குழந்தைகள்தானே என்று அலட்சியமாக இல்லாமல் பெற்றோரும் சரி, ஆசிரியர்களும் சரி அவர்களை மிகுந்த சிரத்தை எடுத்துக் கவனிக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கும் நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம் என்ற எண்ணத்தை அவர்கள் மனத்தில் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் சொல்வதை குழந்தைகள் கேட்பார்கள். எதிர்காலத்தில் சிறந்த குடிமகன்களாக அவர்கள் உருவாகவும் அது வழி வகுக்கும்.

### 1.5.9 படைப்பாற்றலின் நன்மைகள்/ பயன்கள்

மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்த்தால் கீழ்க்காணும் பயன்கள் விளையும் என்பதில் ஐயமில்லை. படைப்பாற்றலின் மூலம் மாணவர்,

- ஆராய்ந்து அறியும் திறனை வளர்த்துக் கொள்வர்
- சிக்கலுக்குத் தீர்வு காண்பர்
- தானே செய்து பார்த்துப் புரிந்து கொள்வர்
- கற்றலுக்கான பொருள்களைத் திரட்டும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வர்
- கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வர்
- புதிய கோணத்தில் வினா எழுப்புவர்
- கருத்துகளைத் தொகுத்தறிவர்
- புதிய சூழலைப் பயன்படுத்துவர்
- கற்கும் முயற்சியை மேற்கொள்ளும் திறன் பெறுவர்
- கற்றலில் இயற்கையான ஆர்வத்தைப் பெறுவர்
- கற்றலுக்கான வழிமுறைகளை வகுப்பர்
- கற்றலுக்கான ஆயத்தத்தை ஏற்படுத்திக்கொள்வர்
- அனுபவங்கள் மூலம் கற்பர்
- பகுத்தறியும் மனப்பான்மை வளர்த்துக் கொள்வர்
- கருத்துக்களைப் புரிந்து கொள்வர்
- சுய மதிப்பீடு செய்வர்

## 1.6 தொகுப்புரை

### தொகுப்புரை

புதிதாக ஒன்றனைத் தனித்தன்மையுடன் உருவாக்குவதே படைப்பாற்றலாகும். படைப்பாற்றல் என்பது ஓர் உயர்நிலைத் திறனாகும். புதுமை விளைந்தால் அது படைப்பாற்றலின் செயலாக நாம் கொள்ளலாம். ஒரு சிக்கலைப் புதிய முறையில் தீர்ப்பது மற்றும் ஓர் இலக்கை எவருக்கும் தோன்றாத ஒரு புதிய வழியைப் பின்பற்றி அடைவது போன்றவை படைப்பாற்றலின் வெளிப்பாடுகளாகும். இவ்வாறு புதிய பொருள் கொள்வதில் ஒருங்கிணைப்பு, பாகுபாடு, புதிய உத்திகள், புதுக்கருத்துகள் ஆகியன யாவும் இணைந்து காணப்படும். உண்மையான படைப்பாற்றலின் விளைவுகள், சமூகப் பயனை நோக்கியும், மக்களிடையே நல்வாழ்வினை தோற்றுவிப்பதாகவும் அமையும். ஆனால் எந்தப் புதிய கருத்தும் சமூகப் பயனுடையது என்று முன்கூட்டியே முடிவாகக் கூறுவது இயலாது. எனவே குழந்தைகளின் சிந்தனைத் திறனைத் தூண்டி, படைப்பாற்றலை வெளிக்கொணரச் செய்வது ஆசிரியர்களின் கடமையாகும். இவ்வலகில் படைப்பாற்றலில் குழந்தைகள் சிறந்து விளங்க ஆசிரியர் கவனிக்க வேண்டிய செயல்பாடுகள் குறித்து விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II | |
|---|---|
| 1. | படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடுகளைக் கூறுக. |
| 2. | படைப்பாற்றல் பற்றிய உளவியல் கோட்பாடுகள் பற்றி விளக்குக. |
| 3. | படைப்பாற்றலின் இயல்புகள் யாவை? |
| 4. | படைப்பாற்றலின் கூறுகளை விளக்குக? |
| 5. | படைப்பற்றலை வெளிப்படுத்துவதற்கான தடைகளைக் கூறுக. |
| 6. | படைப்பாளரின் ஆளுமைப் பண்புகளை விளக்குக. |
| 7. | படைப்பாற்றலை வளர்ப்பதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர் பங்கினை எழுதுக. |
| 8. | படைப்பாற்றலின் நன்மைகளை விவரித்து எழுதுக. |